Clr.No.19

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

**Calendar :**
**Miscellaneous :**
**Preliminary Register : Case No. CC/82/2018**
**Sessions :**
**Prosecution**
**Deposition of witness for : PW 2 / LW 2**

**Name ..** திருமதி. பார்வதி

**Father's/Husband's Name ..** திரு. ஜகநாதன்

**Village**
**Taluk ..**
**Caste ..**
**Calling ..**
**Religion ..**
**Age .. 67**

**Date: 19/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1. நான் தற்போது எண். எண். 52/B, S.P கோவில் முதல் தெரு, திருவொற்றியூர் என்ற முகவரில் வசித்து வருகிறேன். எனது மகள் ஜீவிதாவிற்கு 29.08.2015ம் ஆண்டு செந்தில்குமார் என்பவருடன் திருமணம் நடந்தது. பொண்ணுக்கு 30 சவரனும் மாப்பிளைக்கு 10 சவரனும் கார் மற்றும் இதர சீர்வரிசைகள் செய்தோம்.

2. திருமணத்திற்கு பின்பு மூன்று மாத்ததிற்கு நன்றாக இருந்தார். அதற்கு பின்பு மகளின் மாமியார், மாமனார் மற்றும் நாத்தனர் ஆகியோர் 100 சவரன் கேட்டார்கள். திருமணத்திற்கு முன்பாகவே 200 சவரண் நகை கேட்டார்கள். எங்களால் முடியாது என்று சொல்லிவிட்டோம்.

3. எனது மகள் கர்பமானார். எனது மகளை மருத்துவர்கள் ஓய்வு எடுக்கச்சொல்லி அறிவுறுத்தினார்கள். நானும் எனது மகளும் எனது மகளை பார்க்க அவரது வீட்டிற்கு சென்றோம். எனது மகளின் மாமியார் எங்களை எதற்காக வந்தீர்கள் என்றும் சத்திரமா கட்டி வைத்துள்ளோம் என்று கேட்டார்கள். நாங்கள் எனது மகளை வீட்டிற்கு அழைத்துச் சொல்கிறோம் என்று கேட்டதற்கு மறுத்துவிட்டார்கள். 6 மாதம் சென்ற பிறகு அவர்கள் எனது மகளை எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள்.

4. எனது மகளுக்கு வலி வந்ததும். நாங்கள் அவர்களிடம் சொன்னோம். நாங்கள் வந்த பிறகு தான் எனது மகளை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். குழந்தை பிறந்தவுடனே குழந்தையை அழைத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள்.

5. குழந்தையை பிடுங்கி வைத்துக்கொண்டு வேலையிலுருந்து மாற்றுதல் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று எனது மகளிடம் சொன்னார்கள். எனது மகளை அவரது கணவர், மாமியார் மற்றும் நாத்தனார் ஆகியோர் முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். புகார் கொடுப்பதாக சொன்ன போது நாங்களே தூக்கு மாட்டிவிட்டு தற்கொலை செய்து கொண்டதாக சொல்லிவிடுவோம் என்று கூறினார்கள்.

6. நாங்கள் இதை கேள்விபட்டு எனது மகளை பார்க்க சென்ற போது அசிங்க அசிங்கமாக பேசி அவமானப்படுத்திவிட்டார்கள். குழந்தையை பார்க்கவும் விடவில்லை. எனது மகளை மெண்டல்

டார்ச்சர் செய்தார்கள். அதை கேட்டதற்கு மாமியார் என்னை அடித்துவிட்டார்கள்.

7. எனது மகள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். குழந்தையை அவர்கள் அழைத்துச் சென்றுவிட்டார்கள். பிறகு நாங்கள் போலீசில் புகார்கொடுத்தோம்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை** :-

8. போலீசார் என்று உங்களை விசாரணை செய்தார் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் 2017ம் ஆண்டு திருமணம் ஆகி உங்களது மகள் சத்துவாச்சேரில் உள்ள மாமியார் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான்.

9. கருவுற்ற பின்பு தான் டெல்லிக்கு சென்றாரா? என்றால் சரிதான் அதுவரை மாமியார் வீட்டில் தான் இருந்தார். உங்களது மகளின் நாத்தானாருக்கு வேலூரில் திருமணம் நடந்தது அப்போது தான் குழந்தையை எடுத்துவிட்டு வந்தீர்கள் என்றால் சரிதான். அது சம்பந்தமாக அவர்கள் அங்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள்

என்றால் சரிதான். போலீஸ் விசாரணைக்கு அங்கு போனீர்களா என்றால் இல்லை.

10. குழந்தையை உங்களிடம் ஒப்படைத்து விட்டு உங்களது மகள் வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் உடனே அவர்கள் எடுத்துச்சென்றுவிட்டார்கள். அது குறித்து நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் குழந்தையை அவர்களிடம் இருந்து பெற்று எங்களிடம் ஒப்படைத்தார்கள். எனது மகள் சென்னையில் உள்ள NICயில் வேலை செய்து வருகிறார்.

11. குழந்தையை பார்ப்பதற்காக குழந்தையின் அப்பா வரும் போது அவரை நீங்கள் அடித்து பற்றி அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா ? என்றால் இல்லை. உங்களது மகளை கொடுமை படுத்திய விஷயங்கள் அனைத்தும் பெங்களூரில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். அது சம்பந்தமாக போலீசில் நீங்கள் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

12. செந்தில் உங்கள் மகளை கொடுமைபடுத்தவில்லை என்றாலும் அவர் உங்களிடம் எந்த நகையும் கேட்கவில்லை என்றாலும், உங்களது மகளின் பேச்சை கேட்டு நீங்கள் அவரது வாழ்க்கையை வாழவிடவில்லை என்றால் சரியல்ல.

13. திருமணத்திற்கு கொடுத்த சீதனப்பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு நீங்கள் காவல் நிலையத்தில் கையொப்பமிட்டீர்கள் என்றால் பாதி பொருட்களை பெற்றுக்கொண்டோம். மீதி பொருட்களை பின்னிட்டு பெற்றுக்கொள்ளுமாறு நீதி மன்றத்தில் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2025.11.19 14:04:47 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**

Clr.No.19

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/82/2018** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **PW 3 / LW 3** |
| **Name** | .. | திரு. ஜெகநாதன் |
| **Father's/Husband's Name** | .. | திரு. திருவெங்கடம் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **75** |

**Date: 19/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1. நான் தற்போது எண். 52/B, S.P கோவில் முதல் தெரு, திருவொற்றியூர் என்ற முகவரில் வசித்து வருகிறேன். எனது மகளுக்கு 29.08.2013 அன்று செந்தில்குமார் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. அவர்கள் 100 சவரண் கேட்டார்கள். ஆனால் நாங்கள் பொண்ணுக்கு 30 சவரணும் மாப்பிள்ளைக்கு 10 சவரணும் கார், 1 ½ கிலோ வெள்ளி, 1,50,000/- ரூபாய் தொகையும் மற்ற இதர பொருட்களும் கொடுத்தோம்.

2. எனது மகளின் மாமியார் அதிகமாக வரதட்சனை கேட்டார்கள். 2015ல் எனக்கு உடல் நிலை சரியில்லை 2016ல் எனது மகள் என்னைபார்க்கவந்தார். அதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. பொங்களூருக்கு நாங்கள் எப்போது சென்றாலும் எங்களது மகளை பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை. எனது மகளின் நாத்தனார் திருமணத்திற்கு அடித்த பத்திரிக்கையில் எனது மகளின் பெயர் கூட போடவில்லை. இதை கேட்டதற்கு எனது மகளை டைவர்ஸ் செய்யப்போவதாக சொன்னார்கள்.

3. எனது மகளுக்கு சாப்பாடு போடாமலும் அவளிடம் உள்ள ATM கார்டை வாங்கிக்கொண்டு வேலையை விட்டு நின்றுவிடுமாறு வர்புருத்தினார்கள். பிறகு எனது மகள் 2017ம் வருடம் தனது குழந்தையை எடுத்துக்கொண்டு எங்களது வீட்டிற்கு வந்துவிட்டார். 5 நாட்கள் கழித்து செந்தில்குமார் எங்களை அடித்துவிட்டு குழந்தையை எடுத்து சென்றுவிட்டார்கள். அதில் இடது பக்க கை விரல்களை உடைத்துவிட்டார்கள். நாங்கள் போலீசில் புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள்.

எதிர்தரப்பு குறுக்கு விசாரணை

4. திருமணம் முடிந்து உங்களது மகள் வேலூரில் 25 நாட்கள் இருந்த பின்பு தான் டெல்லிக்கு சென்றார் என்றால் சரிதான். அதன் பின்பு தான் அவர்கள் பணிமாறுதல் பெற்று பெங்களூருக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. உங்களது மகள் பெங்களூரில் வேலை செய்த போது உங்களது மருமகன் சென்னையில் உள்ள IITயில் சேர்ந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மகள் டெல்லியில் இருந்த போதே கருவுற்றிருந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு அவர் மாமியார் வீட்டிற்கு

சென்றுவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் டெல்லி பெங்களூர், வேலூரில் தான் வசித்தார்கள் என்றாலும் திருவொற்றியூரில் வசிக்கவில்லை என்றால் சரிதான்.

6. குழந்தை பிறந்த பின்பு உங்களது மகள் வேலூரில் தான் இருந்தார் என்றால் 1 வாரம் இங்கு இருந்து உறவினர்கள் சென்றுவிட்டார்கள். பின்னிட்டு 3 மாதம் கழித்து எனது மகள் வேலூர் சென்றுவிட்டார். அப்போது மருமகன் வேலூரில் தான் இருந்தார். உங்களது மகளின் நாத்தனார் திருமணத்திற்கு அடித்த பத்திரிக்கையில் உங்களது மகளின் பெயர் இல்லாததால் அதை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தீர்களா என்றால் நான் கொடுக்கவில்லை வேறு யாராவது கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது.

7. அந்த குழந்தையை மாப்பிள்ளை கேட்டிற்கு வெளியே தூக்கிப்போட்டார் அவர்கள் எடுத்து சென்றுவிட்டார்கள். அது என்னைக்கு நடந்த்து என்றால் 2017ம் வருடம். புகார் கொடுத்து 5 நாட்கள் கழித்து குழந்தையை எங்களிடத்தில் கொடுத்தார்கள். இப்பொழுது குழந்தை உங்களுடைய பராமரிப்பில் தான் உள்ளது

என்றால் சரிதான். உங்களது மகள் வேலைக்கு சென்று வருகிறார் என்றால் சரிதான்.

8. சீதன பொருட்களை வாங்கிவிட்டீர்களா என்றால் கொஞ்சம் வாங்கிவிட்டோம். மீத்த்தை வாங்க நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. உங்களது மகள் சேர்ந்து வாழ குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

9. உங்களை அடித்து கையை ஒடித்த மருத்துவமனை சான்றிதழ்களை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளோன். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் குழந்தையை கொடுத்தால் சமாதானம் ஆவதாக சொன்னார்கள். குழந்தைக்காக தான் தற்போது இந்த பிரச்சனை என்றால் இல்லை. மகள் வரதட்சனை, துன்புறுத்தல்காக தான் இந்த புகார் கொடுத்துள்ளோம்.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2025.11.19 14:04:57 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்